1969 மார்ச் 21]

வேட்டைக்காரன்புதூரில் விவசாய வருமான வரி வசூல்

* 397 வினா.—திரு. கரு. சீமைச்சாமி,
திரு. வி. கே கோதண்டராமன்,
திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்,
திரு. என். எஸ். வி. சித்தன்.
} மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) வேட்டைக்காரன்புதூரில் விவசாய வருமான வரி பாக்கியை வசூலிப்பதற்காகச் சென்ற அதிகாரிகளால் தனியார் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டது சம்பந்தமான புகாரை விசாரிக்க தமிழ்நாடு அரசு ரெவின்யூ போர்டு மெம்பர் ஒருவரை நியமித்துள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரமென்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சம்பவத்தை ஒட்டிய சில வழக்குகள் வழக்குமன்றத்திலுள்ள தால், விவரங்கள் தெரிவிக்க இயலவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் என்று சொல்லக்கூடியவர் அதிகாரிகளாலும், போலீஸ் அதிகாரிகளாலும் அடிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தச் சம்பவத்தையொட்டிய சில வழக்குகள் வழக்குமன்றத்தில் இருப்பதால் விவரங்கள் சொல்வதற்கில்லையென்று கூறினார்கள். மீண்டும் அதைப்பற்றி விளக்கம் கேட்கக்கூடாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, வழக்குகள் வழக்குமன்றத்தில் இருக்கிறதென்பது எனக்குத் தெரியும். சித்திரவதை செய்த அதிகாரிகள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்களா அல்லது இப்பொழுதும் தொடர்ந்து வேலையிலே இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த வழக்கைப்பற்றி திரு. செய்வார் அவர்கள் ஓர் அறிக்கை வெளி யிட்டிருக்கிறார்கள். வழக்குமன்றத்தில் வழக்கு இருப்பதன் காரண மாகத்தான் அந்த அறிக்கை கூட வெளியிட முடியாமல் இருந்து வருகிறது. அந்த அதிகாரிகள் சஸ்பென்ஷனில் இருக்கிறார்களா, இல்லையா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 398 முதல் 401 வரை, அமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க, பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

பயிர் செய்வதற்கான செலவு

* 402 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் கணக்குப்படி நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ஆகின்ற விவசாயச் செலவும், கரும்பு, வேர்க்கடலை ஆகியவற்றின் உற்பத்திக்கு ஆகின்ற செலவும் முறையே எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்வதற்கான செலவு :—

(1) நெல்—

(அ) இறைவைப் பாசனம் மூலம்	ரூ. 330·00
(ஆ) பாய்ச்சல் பாசனம் மூலம்	ரூ. 268·00
(2) கரும்பு—	ரூ. 1081·74

(3) வேர்க்கடலை—

(அ) மானவாரி—

(1) துறையினரின் முறை.
கொத்து வேர்க்கடலை, கொடி வேர்க்கடலை இவை இரண்டிற்கான சராசரி செலவு. ரூ. 343·00

(2) உள்ளூர் முறை—
கொத்து வேர்க்கடலை, கொடி வேர்க்கடலை இவை இரண்டுக்குமான் சராசரி செலவு. ரூ. 286·62

(ஆ) பாசனம் மூலம் விளைவித்தல் :—

துறையினர் முறை :—

(1) கொத்து வேர்க்கடலை வகைக்கும், கொடி வேர்க்கடலை வகைக்கும் சராசரி செலவு. ரூ. 575·75

(2) உள்ளூர் முறை :—
கொத்து வேர்க்கடலை வகைக்கும், கொடி வேர்க்கடலை வகைக்கும் சராசரி செலவு. ரூ. 380·50

திரு. கொளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியது எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்துமா ? அல்லது சில குறிப்பிட்ட மாவட்டங்களுக்குப் பொருந்துமா? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது ? எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள்தான் கணக்கு விவரங்களைப் படித்துவிட்டாரே ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, சராசரிக் கணக்கு எடுத்துத்தான் இந்த விவரம் தெரிவிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்குச் சராசரி வருமானம் 768 ரூபாய் என்றும், செலவு 330 போக பாக்கி 438 ரூபாய் என்றும் கணக்கிடப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு 330 ரூபாய் என்றும் மற்றவற்றிற்கு 220 ரூபாய் என்றும் செலவு ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டது. இன்னின்ன அயிட்டத்திற்கு இவ்வளவு ரூபாய் செலவாகிறது என்கிற கணக்கை பேரவைமுன் வைக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, முழு விவரமாக, அதாவது என்னென்ன நெல்லுக்கு என்று கேட்டால் தேவையான விவரம் அச்சடிக்கப்பட்டு, பேரவைமுன் வைக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்திச் செலவைக் கணக்கிடும்போது, விதைக்கான விலை, உழுத செலவு போன்றவை கணக்கிடப்படுவதோடு, சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் உழைக்கும்போது அவர்களுடைய உழைப்புச் செலவையும் சேர்த்துக் கணக்கிடப்படுகிறதா ? அப்படியென்றால் அவர்களுடைய உழைப்புச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உற்பத்தி செலவில் கரும்புப் பயிர் செய்வதற்கு 1081 ரூபாய் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உற்பத்திச் செலவு கரும்புக்கு அதிகப்பட்டிருப்பதன் காரணமாக, கரும்புக்கு விலை அதிகப்

படுத்தப்படுமா ? தற்போது 85 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்க உணவு அமைச்சர் அவர்கள் குறைந்தபட்சம் 100 ரூபாய் ஒரு டன்னுக்கு விலை கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, இதை அதிகப்படுத்த மாநில அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் முழுமையாகத் தெரிந்துகொண்டு கேட்கவில்லையென்று நினைக்கிறேன். கரும்பு விலை டன்னுக்கு 90 ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஆரம்பத்திலே டன்னுக்கு 85 ரூபாய் என்றும், சீஸன் காலத்தில் 90 ரூபாய் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆலைக்காரர்களும், விவசாயிகளும் சேர்ந்து கூடிப்பேசி எடுத்த முடிவு இது

திரு. ஆர். கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டைவிட இனி வருகிற ஆண்டுகளில் உற்பத்திச் செலவு அதிகமாகுமென எதிர்பார்க்கிறார்கள். உரத்தின் விலை 52 ரூபாய்க்கு விற்றது 59 ரூபாய் என்று கூடிவிட்டது. ஆகவே, உர விலையைக் குறைக்கும்படி மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா ? அல்லது அதற்குத் தகுந்த அளவில் மானியமாவது விவசாயிகட்குக் கொடுக்க மாநில அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியும் கேட்டு, பதிலையும் அவரே சொல்லியிருக்கிறார். மத்திய அரசு உரத்தின்மீது போட்டிருக்கிற வரியின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தை மத்திய உணவு அமைச்சர் அவர்களிடத்தில் நானும், நிதியமைச்சர் அவர்களும் வற்புறுத்தியிருக்கிறோம் உரத்தின்மீது போடப்பட்டிருக்கிற வரியை வாபஸ் பெறவேண்டும். மத்திய உணவு அமைச்சர் அவர்களும், திரு. மொரார்ஜி தேசாய் அவர்களும் இதை மறு பரிசீலனை செய்வதாக கருத்து தெரிவித்திருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட உரத்தின்மீது போட்டிருக்கிற வரியை எதிர்த்திருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் திரு. நல்லசாமி அவர்கள் ஒருவரைத் தவிர மற்றக் காங்கிரஸ் உறுப்பினர்கள் இதை எதிர்த்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி உற்பத்திச் செலவைப்பற்றியது; விலையைப்பற்றியது அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் நெல்லுக்கு என்ன விலை, கரும்புக்கு என்ன விலை என்று கேட்க ஆரம்பித்தால் துணைக் கேள்விகள் மூலக் கேள்வியையொட்டி அமையவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு செலவு எவ்வளவு என்ற புள்ளிவிவரக் கணக்கைக் கொடுத்தார்கள். இந்தக் கணக்கு எங்கிருந்து பெறப்பட்டது? விதைப்பண்ணையிலிருந்து புள்ளிவிவரம் பெறப்பட்டதா? அல்லது அதிகாரிகள் இதைக் கொடுத்தார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தப் புள்ளிவிவரக் கணக்கை விவசாய இலாகா தயார் செய்துகொடுத்தது.

அரிசி ஆலைகளுக்கு உரிமங்கள்

***403 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

நெல் அறைக்கும் லைசென்சுகளைக் கொடுக்க, கலெக்டர்களின் அதிகாரத்திற்கே விட்டுவிட உத்திரவு போடப்பட்டிருக்கிறதா?